# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8030870

1. District மாவட்டம்: Chennai PS காவல்நிலையம்: Chennai city-III Year ஆண்டு: 2019 FIR No. மு.த.அ. எண்: 1/AC/2019/CC-III Date நாள்: 18.03.2019

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7 A

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Crpc Sections பிரிவுகள்: 102 Crpc

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 30.10.20 Date to நாள் வரை :

   Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : 16.00 hrs Time to நேரம் வரை : 17.30 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.10.2018 Time நேரம் :

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30.10.2018 Time நேரம் :

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Ezhilagam, chepauk, chennai-5 North East, 15KMS

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o The Director of Boilers, Ezhilagam campus, chepauk, chennai-5

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tmt. B. Sarala (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் INDIAN (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Tahsildar District Deputy Inspection cell officer (g) Address : முகவரி O/o The District Inspection cell, Chennai collectorate, chennai-1

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Dr. S. Sakthivel, Director of Boilers, Ezhilagam, chepauk, chennai-5

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   The delay was caused for obtaining the approval from the public works Department.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
An Amount of Rs. 3,14,000/- was seized from the vehicl possessed by the A0 and Rs. 17,000/- was seized from the out side persons presented the office of Director of Boiler could not accounted for the same.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...Mr. Basil Srinivasan... Rank ...Inspector of Police... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ...VAC, Chennai City III... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 18/3/19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19.03.2019

Name: பெயர் S. JOHN CLEMENT
Rank: நிலை DSP, VAC No. எண் ..........
CC-III, Chennai-40

Chennai V&AC, Chennai City-III Crime No.1/AC/2019/CC-III FIR Continuation (Column -12):-

பணிந்தனுப்பப்படுகிறது:-

இன்று 18.03.2019-ந்தேதி மாலை 18.30 மணியளவில் சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3ன் காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் அலுவலக பணியிலிருந்தபோது, பொதுப்பணித்துறை அலுவலக கடித எண் SC 39383/2018/PWD/CC-III-ல் உள்ள விவரத்தின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டி, இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, 22.02.2019-ந்தேதி மற்றும் 18.03.2019-தேதியிட்ட குறிப்பாணையில் Dr.S.சக்திவேல், இயக்குநர் கொதிகலன், பொதுப்பணித்துறை, எழிலகம் சென்னை-05 என்பவர் மீது வழக்கு பதிவு செய்ய இசைவாணை வழங்கி வந்த கடிதத்தினை பார்வையிட்டும், Dr.S.சக்திவேல், இயக்குநர் கொதிகலன், பொதுப்பணித்துறை, எழிலகம் சென்னை-5 என்பவரது அலுவலகத்தில் 30.10.2018 அன்று மாலை 4 மணிமுதல் 5.30 மணிவரை நடைபெற்ற மாவட்ட தணிக்கை குழுவும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நகரப்பிரிவு-3-ம் இணைந்து கூட்டு ஆய்வு நடவடிக்கை செய்து இதுகுறித்தான கூட்டு அறிக்கையின்படி திருமதி B.சரளா, வட்டாட்சியர், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், சென்னை-1 என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் மேற்படி இயக்குநர், கொதிகலன், எழிலகம், சென்னை-05 என்பவர் மீது ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம், 2018, பிரிவு எண் 7(A) மற்றும் பிரிவு 102 கு.வி.மு.ச.ன்படி வழக்கு பதிவு செய்யப்படுகிறது. கடந்த 30.10.2018 அன்று எதிரியின் அலுவலகத்தில் மேற்கொண்ட கூட்டு திடீர் ஆய்வின் நடவடிக்ககைளின் அறிக்கை விவரம் வருமாறு:- அனுப்புனர், திருமதி B.சரளா, வட்டாட்சியர், மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழும அலுவலகம், சென்னை-01. பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-3, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, ஆலந்தூர், சென்னை-16. ந.க.எண்.அ/734/2018, நாள் 30.10.2018, அய்யா, பொருள் : கூட்டுத் தணிக்கை - இரு துறை கூட்டு திடீர் தணிக்கை. சென்னை-5, சேப்பாக்கம், எழிலகம் வளாகம், பொதுப்பணித்துறை அலுவலகம் முதல் தளத்தில் இயங்கும் கொதிகலன்கள் இயக்குநர் அலுவலகத்தில் 30.10.2018 அன்று கூட்டுத் தணிக்கை செய்யப்பட்டது - நடவடிக்கை எடுக்க அனுப்புதல் - தொடர்பாக. பார்வை : சம்மந்தப்பட்ட ஆவணங்கள். சென்னை மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3-ன் காவல் துணைக்கண்காணிப்பாளர் இணைந்து 30.10.2018 மாலை 16.00 மணிமுதல் 17.30 மணிவரை, சென்னை-5, சேப்பாக்கம், எழிலகம் வளாகம், பொதுப்பணித்துறை அலுவலகம் முதல் தளத்தில் இயங்கும் கொதிகலன்கள் இயக்குநர், அலுவலகத்தில் இருதுறைகூட்டுத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டுத் தணிக்கையின்போது கைப்பற்றப்பட்ட தொகை ரூ.3,31,000/- மற்றும் கைப்பற்றப்பட்ட பதிவேடுகளின் நகல்கள் ஆகியவற்றை

மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, இன்று 30.10.2018-ந்தேதி காவல் துணைகண்காணிப்பாளர், சென்னைநகரப் பிரிவு-3, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை-16 அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இக்கூட்டுத் தணிக்கையின் நடவடிக்கை குறிப்பு தகுந்த மேல் நடவடிக்கைக்கு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. தங்கள் நம்பிக்கைக்குரிய (ஓம்/-xxx B.சரளா), துணை ஆய்வுக் குழும அலுவலர், சென்னை-1. இணைப்பு : சென்னை ஆய்வுக் குழு மற்றும் சென்னை நகர ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை சென்னை நகரப் பிரிவு- III காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில், சென்னை-5, சேப்பாக்கம், எழிலகம் வளாகம், பொதுப்பணித்துறை அலுவலகம் முதல் தளத்தில் இயங்கும் கொதிகலன்கள் இயக்குநர், அலுவலகத்தில் இன்று 30.10.2018 மாலை 16.00 மணிமுதல் 17.30 மணிவரை மேற்கொள்ளப்பட்ட திடீர் கூட்டுத் ஆய்வின் நடவடிக்கைகளின் விவரம் பின்வருமாறு, சென்னை மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப் பிரிவு- III, காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில், சென்னை-5, சேப்பாக்கம், பொதுப்பணித்துறை அலுவலகம், கொதிகலன்கள் இயக்குநர், அலுவலகத்தில் இன்று 30.10.2018 மாலை 16.00 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட திடீர் கூட்டு ஆய்வின் நடவடிக்கைகள். அலுவலகத் தொலைபேசி எண் 25911133, துறைத் தலைமை அலுவலகம். முதன்மை தலைமை பொறியாளர் / மற்றும் தலைமை பொறியாளர் (பொது) பொதுப்பணித்துறை, எழிலகம், சேப்பாக்கம், சென்னை-600 005 திடீர் கூட்டு ஆய்வில் ஈடுபட்ட அலுவலர்கள் விவரம் பின்வருமாறு, 1) திருமதி B.சரளா, வட்டாட்சியர், மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழும அலுவலகம், சென்னை - 600 001, 2) திரு.எஸ்.ஜான் கிளமென்ட், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3, ஆலந்தூர், சென்னை-16, 3) திரு.மா.விஸ்வக்குமார், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப் பிரிவு-3, ஆலந்தூர், சென்னை-16, 4) திரு.தா.அந்தோணி தங்கராஜ், தலைமைக் காவலர் 23136, ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப் பிரிவு-3, ஆலந்தூர், சென்னை-16, 5) திரு ஆர்.மூர்த்தி, தலைமைக்காவலர் 23186, ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப் பிரிவு-3, ஆலந்தூர், சென்னை-16 மற்றும் 6) திரு எஸ்.வி.ராமானுஜம், தலைமை காவலர் 17950, ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப் பிரிவு-3, ஆலந்தூர், சென்னை-16. இன்று (30.10.2018) மாலை 16.00 மணியளவில் மாவட்ட துணை ஆய்வுக் குழு அலுவலர் திருமதி B. சரளா மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை நகர பிரிவு -3, காவல் துணை கண்காணிப்பாளர், திரு எஸ்.ஜான் கிளமென்ட் ஆகிய இரு துறை குழுவினர் இணைந்து சென்னை - 600 005, சேப்பாக்கம், பொதுப்பணித்துறை அலுவலகம், கொதிகலன்கள் இயக்குநர், அலுவலகத்தில் முதல் தளம், தெற்கு பிரிவில் இயங்கும் கொதிகலன்கள்

இயக்குநர், அலுவலகத்தில் கூட்டுத் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பொதுப்பணித்துறை அலுவலகம், கொதிகலன்கள் இயக்குநர், அலுவலகத்தில் கொதிகலன்கள் இயக்குநர் Dr.S.சக்திவேல் பணியில் இருந்தார். அவருடைய அறைக்கு வெளியில் அலுவலக உதவியாளர் திரு.வெ.ஜகந்நாதன் இருந்தார். நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் மேற்படி அலுவலகம் மற்றும் இயக்குநர் Dr.S.சக்திவேல் அவர்கள் தன்னுடைய அலுவலக பணிக்காக பயன்படுத்திய பிரகாஷ் டிராவல்ஸின் வாகனம் Toyoto Etios TN 14 D 8492 என்ற கார் ஆகியவை தணிக்கை செய்யப்பட்டன. மேற்படி காரை சோதனையிட காரின் டேஷ்போர்டில் ரூ.2000/- தாள்கள் கொண்ட கட்டு ஒன்றும், ரூ.500/- தாள்கள் கொண்ட கட்டுகள் நான்கும் இருந்தது. அதை எண்ணிப்பார்க்க மொத்தம் ரூ.3,14,000/- (Rs.2000x65 = 1,30,000, Rs.500x368 = 1,84,000) இருந்தது. மேற்படி பணம் குறித்து விசாரிக்க, Dr.S.சக்திவேல் அவர்கள் கடந்த இரண்டு வாரமாக பாய்லர் கம்பெனி நபர்கள் கொடுத்த பணத்தை தான் சேர்த்து வைத்திருந்ததாகவும், இன்று (30.10.2018) அதை அவர் குடும்பம் குடியிருக்கும் திருச்சிக்கு கொடுத்தனுப்புவதற்காக எடுத்து வந்து காரில் வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். மேற்படி தணிக்கையில் கார் ஓட்டுநர் திரு பிரபாகரன் அவர்களும் காரில் Dr.S.சக்திவேல் அவர்கள் பணம் வைத்திருந்ததை உறுதி செய்தார். மேற்கண்ட பணம் ரூ.3,14,000/- மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. பொதுப்பணித்துறை அலுவலகம், கொதிகலன்கள் இயக்குநர், அலுவலகத்தின் அறைக்கு வெளியில் இருந்த அலுவலக உதவியாளர் திரு.வெ.ஜகந்நாதன் அவர்கள் இருந்தார். மேலும், இயக்குநர் அறைக்கு வெளியே உள்ள திறந்த வெளி அறையில் வடக்கு தெற்காக எதிர் எதிர் திசையில் 6 கேபின்கள் உள்ளன. அதில் பணியிலிருந்த அலுவலர்களின் உடமைகள் மற்றும் அவர்களுடைய பொறுப்பிலுள்ள டேபிள், பீரோக்கள் ஆகியவற்றை சோதனை செய்ததில் அவர்களிடமிருந்த பணத்தின் விவரம் பின்வருமாறு

| வ.எண் | பெயர் | வகிக்கும் பதவி | கையிருப்பி லிருந்த பணம் |
|---|---|---|---|
| 1. | திரு.என்.முருகானந்தம் | கண்காணிப்பாளர் | ரூ.850/- |
| 2. | திரு.கே.தேவராஜன் | உதவியாளர் | ரூ.400/- |
| 3. | திரு.பி.சுப்ரமணியன் | உதவியாளர் | ரூ.3000/- |
| 4. | திரு.ஜி.ராஜேஷ் | தட்டச்சர் | ரூ.50/- |
| 5. | திரு.வி.பாலசுப்ரமணி | பதிவறை உதவியாளர் | ரூ.1200/- |
| 6. | செல்வி. சுஷ்மா | தற்காலிக தட்டச்சர் | ரூ.100/- |
| 7. | திரு.வி.ஜகந்நாதன் | அலுவலக உதவியாளர் | ரூ.600/- |

மேற்கண்ட அலுவலர்கள் வைத்திருந்த பணம் குறித்து தகுந்த விளக்கம் அளித்ததால் திரும்ப அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. அந்த அறையிலிருந்து வேறு பணமோ பொருளோ எதுவும் கைப்பற்றப்படவில்லை. பொதுப்பணித்துறை அலுவலகம், கொதிகலன்கள் இயக்குநர், அலுவலகத்தின் அறைக்கு வெளியில் இருந்த வரவேற்பறையில் இருந்த பின்வரும் வெளிநபர்களை விசாரித்ததில் அவர்களுடைய கம்பெனி சம்மந்தமாக இவ்வலுவலகத்தில் நிலுவையிலுள்ள விவரங்களை தெரிந்து கொள்வதற்காக வந்ததாக தெரிவித்தனர். அவர்களை சோதனையிட்டதில் அவர்களிடமிருந்த பணத்தின் விவரம் பின்வருமாறு,

| வ. எண். | பெயர் மற்றும் விலாசம் | பதவி மற்றும் கம்பெனி விவரம் | அலுவலகத்திற்கு வந்த காரணம் | கையிருப்பிலிருந்த பணம் |
|---|---|---|---|---|
| 1. | திரு.எஸ்.நாகராஜன், ஆ/வ/41/2018, த/பெ என்.சேது, 5/199, திருநகர், பொன்மலை, திருச்சி-4. | அலுவலக ஒருங்கிணைப்பாளர், அஸ்வினி இஞ்சினியரிங் இண்டஸ்டிரீஸ், திருச்சி | படிவம் 3 பி-யில் ஒப்புதல் பெற | ரூ.1,160/- |
| 2. | திரு.எம்.எஸ்.பிரபாகரன், ஆ/வ/29/2018, த/பெ.திரு.சுப்ரமணி, எண்.28, மேட்டுத் தெரு, ஆராசூர் கிராமம், வந்தவாசி வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். | பிராடக்ட் எஞ்சினியர், ஏ.ஜி.சி.சன்மார் குழுமம், வடுகப்பட்டி கிராமம், திருச்சி | டிசைன் அப்ரூவல் வாங்குவதற்காக | ரூ.350/- |
| 3. | திரு.வி.உறரிஉறர சுப்ரமணியன், ஆ/வ/29/2018, த/பெ எச்.விஸ்வநாதன், எண்.56, டிபன்ஸ் ஆபிசர்ஸ் காலனி, நந்தம்பாக்கம், சென்னை-89. | ஒருங்கிணைப்பாளர், பரசுராம் எஞ்சினியரிங் பைப்பிங் ஒர்க்ஸ், குரோம்பேட்டை, சென்னை | டிசைன் அப்ரூவல் வாங்குவதற்காக | ரூ.2,930/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | திரு.ஏ.மரிய தங்க பிரகாசம், ஆ/வ/45/2018, த/பெ அந்தோணிசாமி, எண்.9, விவேகானந்தா நகர், ரயில் நிலையம் அருகில், கிரணூர், புதுக்கோட்டை மாவட்டம் | எக்ஸிகியூடிவ், ரிப்போ இண்டஸ்டீரிஸ் பி லிட், மண்டையூர், புதுக்கோட்டை | படிவம் 3 பி-யில் ஒப்புதல் பெற | ரூ.4,560/- |
| 5. | திரு.என்.சினிவாசன், ஆ/வ/45/2018, த/பெ நரசிம்மன், ஆர்.ஏ.அய்யாசமி தெரு, நேரு நகர், குரோம்பேட்டை, சென்னை-44 | ஒருங்கிணைப்பாளர், கே.எஸ்.பி லிட், கிண்டி, சென்னை | படிவம் 3 சி-யில் ஒப்புதல் பெற | ரூ.600/- |
| 6. | திரு.என்.ஸ்ரீதர், ஆ/வ/ 48/2018, த/பெ திரு.கே.நாராயணசாமி, 96/8, 3வது மெயின் சாலை, சதாசிவ நகர், மடிப்பாக்கம், சென்னை | அலுவலக உதவியாளர், சாய்ராம் பாய்லர் எஞ்சினியர்ஸ் பி.லிட், வேளச்சேரி, சென்னை. | அரசுக்கு செலுத்திய பணம் குறித்த செலுத்துச் சீட்டு வாங்குவதற்காக | ரூ.17,000/- |

மேற்கண்ட நபர்களில் 1 முதல் 5 வரையுள்ளவர்கள் வைத்திருந்த பணம் குறித்து தகுந்த விளக்கம் அளித்ததால் திரும்ப அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. வரிசை எண். 6ல் உள்ள திரு.என்.ஸ்ரீதர் அவர்கள் தகுந்த விளக்கம் அளிக்காததால் அவரிடமிருந்த ரூ.17,000/- (Rs.500x32 = Rs.16,000, Rs.100x10 = 1000) விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பொதுப்பணித்துறை அலுவலகம், கொதிகலன்கள் இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் தங்களுடைய இருப்பு கணக்கை பதிவு செய்யும் பணம் கையிருப்பு பதிவேட்டினை அலுவலகத்தில் பராமரிக்கவில்லை. பொதுப்பணித்துறை அலுவலகம், கொதிகலன்கள் இயக்குநர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் ஆய்வின் போது கொதிகலன்கள் இயக்குநர் அலுவலகம், பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை-05 அலுவலகத்தின் 2018ஆம் ஆண்டு அக்டோபர் மாத

வருகைப் பதிவேடு (பக்கம் 1 முதல் 8 வரை) நகலெடுத்து அதில் கொதிகலன்கள் இயக்குநர் முனைவர் திரு எஸ்.சக்திவேல் அவர்களின் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பிரகாஷ் டிராவல்ஸின் வாகனம் Toyoto Etios TN 14 D 8492 என்ற காரின் RC Book நகலெடுத்து அதிலும் முனைவர் திரு எஸ்.சக்திவேல் அவர்களின் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த இரு துறை கூட்டு திடீர் தணிக்கை இன்று (30.10.2018) மாலை 17.30 மணியளவில் முடிக்கப்பட்டது.

மேற்படி Dr.S.சக்திவேல், தான் அரசு பணிக்காக உபயோகிக்கும் கார் எண். TN 14D 8492 என்ற வாகனத்திலிருந்து எடுக்கப்பட்ட ரூ.3,14,000/-த்தை கடந்த இரண்டு வாரமாக பாய்லர் கம்பெனி நபர்கள் கொடுத்த பணத்தை தான் சேர்த்து வைத்திருந்ததாகவும், இன்று (30.10.2018) அதை அவர் குடும்பம் குடியிருக்கும் திருச்சிக்கு கொடுத்தனுப்புதற்காக எடுத்து வந்து காரில் வைத்திருந்ததை ஒப்புக் கொண்டுள்ளார். இச்செயல் எதிரி தன் பதவியை துஷ்பிரயோகம் செய்து கொதிகலன் உற்பத்தி செய்யும் நிறுவனங்களிலிருந்து லஞ்சமாக கேட்டு பெற்ற பணமாக உறுதி செய்யப்படுகிறது. மேலும், அவரது அலுலகத்திலிருந்த வெளி நபர் திரு. N.ஸ்ரீதர் தன் வசம் வைத்திருந்த ரூ.17,000/ -த்திற்கான சரியான விளக்கம் அளிக்காததால் அவரிடமிருந்து ரூ.17000/. கைப்பற்றப்பட்டது. இந்த பணமானது எதிரிக்கு கொடுக்க வந்த பணமாக கருத வாய்ப்புள்ளது. இவ்விரு செயல்களும் எதிரி தன் பதவியை துஷ்பிரயோகம் செய்து தன் கடமையை செய்ய லஞ்சமாக பெற்ற பணமாக கருத முகாந்திரம் உள்ளதால் அவர் மீது இது குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை செய்ய, மேற்படி கொதிகலன் அலுவலக பொறுப்பாளர், இயக்குநர் Dr.S.சக்திவேல், கொதிகலன் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை -5 என்பவர் மீது ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம், 2018, பிரிவு எண் 7(A) மற்றும் பிரிவு 102 கு.வி.மு.ச.ன்படி வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

Action Taken:
Since the above facts discloses a prima facie case against the said Dr.S.Sakthivel, Director of Boilers, Ezhilagam, Chennai-5, I am registering a case in Chennai City-III Crime No. 1/2019/AC/CC-III, U/s 7 (A) of Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 CrPC at 1830 hrs today (18.03.2019) against the accused for the aforesaid offence, for the purpose of the investigation.

[signature] 18/3/19
(S. John Clement)
DSP, VRAC, CC III,
Chennai-4